பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 08 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. போலந்து சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று அந்நாட்டு பிரதமர் திரு டொனால்டு டஸ்க்-வுடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்துகிறார்.
2. பொருளாதார வளர்ச்சியில் கைவினைப் பொருட்கள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.
3. ஆப்ரிக்காவுடனான வர்த்தகத்தை அடுத்த ஏழு ஆண்டுகளில் இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
4. இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட 35 நாடுகளைச் சேர்ந்தவர்கள் விசா இல்லாமல் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளலாம் என அந்நாட்.டு அரசு அறிவித்துள்ளது.
5. 17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சாய்நாத் பர்தி வெண்கலப் பதக்கம் வென்றார்.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

போலந்து சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று அந்நாட்டு பிரதமர் திரு டொனால்டு டஸ்க்-ஐ சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்துகிறார்.

இந்த பேச்சுவார்த்தையின்போது இரு தலைவர்களும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதிக்க உள்ளனர்.

அந்நாட்டின் பாரம்பரிய முறைப்படி பிரதமருக்கு இன்று வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இதையடுத்து போலந்து அதிபர் திரு ஆன்ஜே டூடா-வையும் திரு நரேந்திரமோடி சந்தித்து பேசவுள்ளார்.

போலந்து நாட்டின் தொழில் துறையினருடனும் பிரதமர் கலந்துரையாடவுள்ளார்.

முன்னதாக நேற்று வார்சாவில் இந்திய சமூகத்தினரிடையே பிரதமர் உரையாற்றினார்.

அனைவரது நலன் மற்றும் வளர்ச்சியில் இந்தியா அக்கறையுடன் செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை இதர நாடுகளுடன் ஒத்துழைப்பை அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

உலகம் தற்போது இந்தியாவை உற்று நோக்குவதாக அவர் தெரிவீத்தார்.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமென்று கூறிய அவர், இது போருக்கான காலம் அல்ல என்பதை இந்தியா உணர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உலகில் எங்கு நெருக்கடி ஏற்பட்டாலும் உடனடியாக உதவும் நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் போலந்தில் உள்ள இந்திய வம்சாவளியினர் முக்கிய பங்காற்றுவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியா மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளதாகவும், அடுத்த சில ஆண்டுகளில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதா நாடாக இந்தியா திகழும் என்றும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

அமர்நாத் யாத்திரை வெற்றிகரமாக நடைபெற உதவிய அனைவருக்கும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பாதுகாப்புப் பணியாளர்கள், அமர்நாத் வாரியம், ஜம்மு-காஷ்மீர் நிர்வாகம் மற்றும் தன்னார்வ அமைப்புகளுக்கும் பாராட்டுத் தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

இந்த ஆண்டு 52 நாட்களில், ஐந்து லட்சத்து 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் யாத்திரை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இது கடந்த 12 ஆண்டுகளில் மிக அதிகபட்ச எண்ணிக்கை இது என்றும் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற 165-வது வருமான வரி தின நிகழ்ச்சியில் பேசிய அவர், நடப்பு ஆண்டில் 58 லட்சத்திற்கும் மேற்பட்டோர் முதல் முறையாக வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்துள்ளதாகக் கூறினார்.

வரி வருவாய் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், வரி செலுத்துவோருக்கு அரசின் மீது நம்பிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வரி செலுத்துவோரிடம் வெளிப்படையான முறையில் நட்புணர்வுடன் அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று திருமதி நிர்மலா சீதாராமன் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் பேசிய நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்திரி வருமான வரித்துறை நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விரைந்து எட்டியுள்ளதாக பாராட்டு தெரிவித்தார்.

வரி வருவாய் ஏழைகளுக்கான நலத்திட்டங்களுக்கும், உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருவதாக திரு பங்கஜ் சௌத்திரி கூறினார்.

[]<<<>>>[]

ஆப்ரிக்காவுடனான வர்த்தகத்தை அடுத்த ஏழு ஆண்டுகளில் இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த 19-வது இந்திய – ஆப்ரிக்க வர்த்தக மாநாட்டில் பேசிய அவர், ஆப்ரிக்க நாடுகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் திறன் இந்தியாவுக்கு உள்ளது என்று கூறினார்.

இதேபோல் குறிப்பிட்ட சில துறைகளில் இந்தியாவின் தேவைகளை பூர்த்தி செய்யும் திறன் ஆப்ரிக்க நாடுகளுக்கும் உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

முக்கிய கனிமங்கள் துறையில் இருதரப்பும் ஒத்துழைப்பை அதிகரிக்கும்பட்சத்தில் சிறந்த பலன்கள் கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஆப்ரிக்காவின் வேளாண் துறைக்கு இந்தியா முக்கிய பங்காற்ற முடியும் என்று அவர் தெரிவித்தார்.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் தொடர்பான செயல்பாடுகளில் மேலும் ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்று திரு பியூஷ்கோயல் வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

தேசிய அறிவியல் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்குகிறார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியல் அறிவியலில் சிறந்து விளங்கிய 33 பேருக்கு இந்த விருதுகளை அவர் வழங்குகிறார்.

இயற்பியல், வேதியியல், மருத்துவம், சுற்றுச்சூழல் உள்ளிட்ட 13 துறைகளில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

[]<<<>>>[]

முதலாவது சர்வதேச விண்வெளி தினம் நாடு முழுவதும் நாளை கொண்டாடப்படுகிறது.

சந்த்ரயான்-மூன்று விண்கலம் வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியதை குறிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி புதுதில்லி பாரத் மண்டபத்தில் நாளை நடைபெறும் பிரதான நிகழ்ச்சியை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தொடங்கி வைக்கிறார்.

நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெங்களூருவில் இஸ்ரோ சார்பில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

மின்சார வாகனங்கள் சோதனை நிலையத்துக்கு பெங்களூருவில் மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

மின்சார வாகன பேட்டரி மற்றும் சார்ஜிங் தொடர்பான ஆய்வுப் பணிகளை தென்மாநிலங்களில் விரிவுபடுத்த இந்த மையம் உதவும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பொருளாதார வளர்ச்சியில் கைவினைப் பொருட்கள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற 24-வது கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது வழங்கு விழாவில் விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

கைவினைப் பொருட்கள் உற்பத்தி துறையில் அதிக அளவில் பெண்கள் ஈடுபட வேண்டுமென்று அவர் அறிவுறுத்தினார்.

கைவினைப் பொருட்கள் துறை தற்போது ஒன்பது முதல் 10 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளதாக திரு கிரிராஜ்சிங் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

அமெரிக்காவின் **N-vidia** நிறுவனம் இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு இயக்கத்துக்கு ஆதரவு அளித்துள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் புதுதில்லியில் நேற்று அமைச்சரைச் சந்தித்து பேசினர்.

சமூக வலைதளத்தில் இது குறித்துப் பதிவிட்டுள்ள அமைச்சர், இந்தியாவில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

இந்தியாவில் சிப் வடிவமைப்பு தொடர்பாகவும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, ஜப்பான் உள்ளிட்ட 35 நாடுகளைச் சேர்ந்தவர்கள் விசா இல்லாமல் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளலாம் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வரும் என்றும், இது ஆறு மாதங்களுக்கு நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அந்நாட்டு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கைக்கான மிகப்பெரிய சுற்றுலா சந்தையாக இந்தியா உள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் இதுவரை இரண்டு லட்சத்துக்கு 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளதாகவும், இது இலங்கையின் மொத்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் 19 சதவீதம் எனவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சாய்நாத் பர்தி வெண்கலப் பதக்கம் வென்றார்.

ஜோர்டானில் நடைபெற்ற இப்போட்டியின் 51 கிலோ எடைப்பிரிவில் கஜகஸ்தானின் **Yerassyl mussan**-ஐ அவர் வென்றார்.

**[]<<<>>>[]**

சர்வதேச மகளிர் கோல்ப் போட்டி ஸ்காட்லாந்தின் செயின்ட் ஆன்ட்ரோஸில் இன்று தொடங்குகிறது.

வரும் 25-ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியாவின் அதிதி அசோக், தீட்சா தாகர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

கேலோ இண்டியா விளையாட்டுப் போட்டிகளின் ஒரு பகுதியாக யோகாசனப் போட்டிகள் பாட்னாவில் இன்று தொடங்குகிறது.

பீகார். ஜார்க்கண்ட், மேற்குவங்கம், ஒடிசா உள்ளிட்ட 11 மாநிலங்களைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

79-வது அகில இந்திய ரயில்வே கால்பந்து போட்டி இன்று சென்னையில் தொடங்குகிறது.

42 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் இப்போட்டி நடைபெறவுள்ளதாக தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

13 ரயில்வே மண்டலங்ககளின் அணிகள் இதில் பங்கேற்கின்றனர்.

இப்போட்டி வரும் 31-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

[]<<<>>>[]

அல்டிமேட் டேபிள் டென்னிஸ் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

அடுத்த மாதம் ஏழாம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் சென்னை, அகமதாபாத், தில்லி, கோவா, ஜெய்ப்பூர், பெங்களூரு, புனே, மும்பை ஆகிய எட்டு அணிகள் பங்கேற்கின்றன.

இந்த அணிகளில் முன்னணி வீரர்களான சரத்கமல், சத்தியன் ஞானசேகரன், மணிக்கா பத்ரா உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இன்று நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் கோவா – ஜெய்ப்பூர் அணிகள் மோதுகின்றன.

[]<<<>>>[]